மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 141/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.R.மாதேசன் | நாள் | 15.03.2023 |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | | |

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :–

1) இவ்வழக்கு சங்கதிகளுக்கு அடிப்படையான 06.04.1965ம் தேதிய என் பாட்டனார் சின்னப்ப கவுண்டர் பெயரிலுள்ள கிரய பத்திரத்திரம் வா.சா.ஆ.1 மற்றும் 03.11.1973 ம் தேதிய என் தந்தை ராமசாமி கவுண்டருக்கும், என் சித்தப்பா நாச்சியக் கவுண்டருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரம் குறித்தும் எனக்கும் நன்றாக தெரியும் என்றால், சரிதான்.

2) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்தி விவரங்களில் நாச்சியப்ப கவுண்டர் நிலத்திற்கும் – தெற்கு, செல்வ நாயகம் நிலத்திற்கும் – வடக்கு, சின்னாயம்மாள் நிலத்திற்கும் – கிழக்கு, அந்தோணி முத்து நிலத்திற்கும் – மேற்கு என கண்டுள்ளது என்றால், சரிதான்.

3) மேற்படி வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள அதே செக்குபந்தி விவரங்கள் கொண்ட நிலம்தான் என் தந்தைக்கு பாகபிரிவினையின் போது பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினையின் போது மேற்படி அந்தோணி முத்து அவரது நிலத்தை பழனியம்மாளுக்கு விற்பனை செய்துவிட்டதால், மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் "பழனியம்மாள் நிலத்திற்கும் – மேற்கு" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4) தற்போது இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 2–வது அயிட்ட சொத்துதான் வழித்தடமாக நான் கூறுகிறேன் என்றால், சரிதான். மேற்படி வழித்தட உரிமையை என் பாட்டனார் பெயரில் உள்ள 1965ம் வருடத்திய கிரய பத்திரத்திலும், என் தந்தை பெயரிலில் உள்ள 1973ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில்தான் நான் கேட்கிறேன் என்றால், சரிதான்.

5) மேற்படி என் பாட்டனார் பெயரிலுள்ள 1965ம் வருடத்திய கிரய பத்திரத்தின் செக்குபந்தி விவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தின் கடைசி பக்கத்தில் தடவழி குறித்து சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு மேற்படி பத்திரத்தில் எந்த இடத்திலும் செக்குபந்தி விவரங்கள் குறிப்பிட்டு எந்த ஒரு தடவழியும் குறிப்பாக சொல்லவில்லை என்றாலும், இட்டேரி பாதை என்று மட்டும்தான் சொல்லியுள்ளார்கள் என்றாலும், சரியல்ல.

6) அவ்வாறு மேற்படி 1965ம் வருடத்திய கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இட்டேரி பாதை என்பது குறித்து 1973ம் வருடத்திய என் தந்தையின் பெயரிலுள்ள பாகபிரிவினை பத்திரத்தில் எந்த குறிப்புகளும் இல்லை என்றாலும், மேற்படி 1965ல் இருந்து 1973ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் மேற்படி இட்டேரி பாதையும் அழிந்துவிட்டது என்றாலும், சரியல்ல. இன்று வரை மேற்படி பாதை உள்ளது.

7) நானும், என் முன்னோர்களும் ஒரு காலத்திலும் மேற்படி இட்டேரி பாதையை நாங்கள் பயன்படுத்தியதே இல்லை என்றாலும், அதனால்தான் 1973ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் மேற்படி இட்டேரி தடம் குறித்து எவ்வித குறிப்புகளும் இல்லை என்றாலும், மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், மேற்படி உண்மை தெரிந்து எங்களுக்கு பாதகமாக போய்விடும் என்பதால்தான், அந்த பத்திரத்தை இதுவரை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

8) தாவா 2-வது அயிட்ட சொத்திற்கு குறுக்கே கடந்த 14.07.2017ம் தேதியில் பிரதிவாதிகள் முற்களை அமைத்தும், கற்கரைகளை அமைத்தும், தாவா சொத்திற்குள் வாதிகள் நுழைய முடியாதபடி இடையூறு செய்தனர் என்றும், என் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 14.07.2017ம் தேதியில் ஏற்பட்ட சம்பவம் குறித்து போலீசில் புகார் அளித்துள்ளோமா என்றால், அடுத்த நாள் அளித்துள்ளோம்.

9) என் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் கடந்த 14.07.2017 மற்றும் 15.07.2017 ம் தேதிகளில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், மேற்படி தாவா 2-வது அயிட்ட சொத்திலுள்ள கல்கட்டுகள் ஏற்கனவே அதில் உள்ளது என்றாலும், இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் வேண்டும் என்பதற்காக அவ்வாறு நடைபெறாத ஒரு சங்கதியை குறிப்பிட்டு போலியாக வழக்கு மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.